[6th March 1964

மருத்துவ பொது சுகாதாரத் துறைகளை இணைத்தல்.

*169 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் தேதி 216-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி மருத்துவத் துறையையும் பொது சுகாதாரத் துறையையும் இணைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: மாநில, மாவட்ட நிலைகளில் மருத்துவத் துறையும், பொதுச் சுகாதார துறையும் தனித் தனி யூனிட்டுகளாகவே தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என அரசினர் முடிவு செய்துள்ளனர்.

திரு. ம. கமலநாதன்: ஹெல்த், மெடிகல் இலாகாவை நிர்வகிப்பதில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அஸிஸ்ட் செய்யலாமென்ற ஒரு அபிப்பிராயம் இருந்தது. அது இன்னும் ஆலோசனையில் இருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: ஆம்.

திரு. ம. கமலநாதன்: டி.எம்.எஸ்., டி.பி.எச்.-ன் கீழ் ஐ.ஏ.எஸ். அதிகாரி வேலை செய்ய மறுத்தது உண்மையா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அம்மாதிரி தகவல் ஒன்றும் இல்லை.

கனம் சபாநாயகர்: " Is the post a higher post or a lower post " என்று கேட்கலாம்.

திரு. ம. கமலநாதன்: சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தின்மீது பதிலளிக்கும்போது, 'ஐ.ஏ.எஸ்.' அதிகாரிகள் டி.எம்.எஸ்., டி.பி.எச். கீழ் வேலை செய்ய ஒத்துக் கொள்வதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்று நான் சொல்லவில்லை. ஐ.ஏ.எஸ். அதிகாரி அட்மினிஸ்ட்ரேட்டிவ் போஸ்ட். **If I remember correct, ' Not less than I.A.S. in rank ",** ஒரு அதிகாரியைப் போடவேண்டுமென்று தான் அரசாங்கம் யோசனையில் இருக்கிறது என்று நான் சொன்னேன். டி.எம்.எஸ்.-க்கும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் அதிகாரிக்கும் சம்பந்தம் இல்லை.

Supply of clothes to scavenging workers.

*170 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any G.O. has been issued to municipalities to reduce the supply of clothes to the scavenging workers; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the table of the House?